www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# நாகப்பட்டினம் மாவட்டம்

## XII பொதுத்தமிழ் - அக்டோபர் மாதத் தேர்வு

நேரம் : 1 மணி 30 நிமிடம் மதிப்பெண் : 45

I. சரியான விடையைத் தேர்க 7 x 1 = 7

1. ஆர்ப்பரிக்கும் கடல் / அதன் அடித்தளம் / மௌனம் , மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
   அ ) இரைச்சல் ஆ ) குறைகுடம் கூத்தாடும்
   இ ) நிறை குடம் நீர்தளும்பல் இல் ஈ ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் - தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
   1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள் 2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்
   அ ) 1 சரி , 2 தவறு ஆ ) 1 தவறு , 2 சரி இ ) 1 தவறு , 2 தவறு ஈ ) 1 சரி , 2 சரி
3. திண்ணியர் என்பதன் பொருள் தருக.
   அ ) அறிவுடையார் ஆ ) மன உறுதியுடையவர் இ ) தீக்காய்வார் ஈ ) அறிவினார்
4. ஒற்றைக் கோணக்கலை ( single dimension art ) எனப்படுவது.
   அ ) திரைப்படம் ஆ ) ஓவியம் இ ) நாடகம் ஈ ) இவை மூன்றும்
5. தலைக்கோலி என்னும் பட்டம் பெற்றவள்
   அ ) கண்ணகி ஆ ) மாதவி இ ) சவரி ஈ ) தேவந்தி
6. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க
   அ ) காதை - 1. கந்தபுராணம் இ ) இலம்பகம் - 3. சூளாமணி
   ஆ ) சருக்கம் - 2. சிவகசிந்தாமணி ஈ ) படலம் - 4. சிலப்பதிகாரம்
   அ ) 3 , 1 , 4 , 2 ஆ ) 4 , 2 , 1 , 3 இ ) 1 , 2 , 3 , 4 ஈ ) 4 , 3 , 2 , 1
7. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ ) சிவஞான முனிவர் ஆ ) மயிலைநாதர் இ ) ஆறுமுக நாவலர் ஈ ) இளம்பூரணர்

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு குறுகிய விடை தருக. 7 x 2 = 14

8. எண்வகை மெய்ப்பாடுகள் எவை ?
9. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
10. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது ?
11. வறுமையும் சிறமையும் தருவது எது ?
12. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடருக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக
    கபிலன் திறமையானவர் என்று ...... ( குமரன் ) தெரியும்.
13. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. களம் - கலம்
14. நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக. - வானம், பற, நிலவு, தொடு
15. காப்பியம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
16. புணர்ச்சி விதி தருக – தலைக்கோல் ( அல்லது ) பெருந்தேர்
17. தமிழாக்கம் தருக - 1. Animation 2. Newsreel

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு அரை பக்க அளவில் விடை தருக 3 x 4 = 12

18. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கொவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
19. திரைப்படத்தின் காட்சி ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
20. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
    இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக
21. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள் நெறி நின்று விளக்குக.

IV. ஆறு மதிப்பெண் வினா ( இரு வினாக்களுக்கு மட்டும் ) 2 x 6 = 12

22. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா ? அல்லது கலைகளின் சங்கமமா ?
    உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.
23. மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக
24. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com